## 4.25 ஊரக உற்பத்திப் பொருள்கள் விற்பனை வளாகங்கள்—பூமாலை பெயரிடப்படுதல்—வழிமுறைகள்

ஊரக வளர்ச்சி (எஸ்.ஜி.எஸ். ஒய்) துறை

அரசாணை (நிலை) எண். 192 நாள் : 19.7.2000

படிக்க :

1. மாண்புமிகு முதலமைச்சரின் வரவு யெசலவு திட்டம் 2000—2001—ன் அறிவிப்பு நாள் 24.03.2000.
2. மத்திய ஊரக வளர்ச்சித் துறை, புதுடெல்லி கடிதம் நாள் 18011/11/99/IRD.II நாள்: 29.03.2000
3. அரசாணை (நிலை) எண். 137. ஊரக வளர்ச்சித் துறை நாள்: 25.5.2000
4. மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலக அ.சா.கு.எண். 793/எ/ஊஆ/2000 நாள்: 14.06.2000

**ஆணை**

2000—2001 ஆம் ஆண்டு வரவு செலவு திட்ட உரையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கிராமப்புற ஏழை எளிய மக்கள் பொன்விழா சுய வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்வதற்கு 'பூமாலை' என்ற வணிக சின்னம் பயன்படுத்தப்படும் என்று உற்பத்தி பொருள்களை விற்பனை செய்வதற்கு ஏற்ற வணிக வளாகங்கள், மாநில தலைநகரத்திலும் மற்றும் மாவட்டந்தோறும் கட்டி இந்த பொருள்களின் விற்பனையை ஊக்குவிக்க விளம்பரம் போன்ற அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ள ரூ. 14.64 கோடி செலவிடப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள். இந்த அறிவிப்பின் அடிப்படையில் படிக்கப்பட்ட மூன்றில் உள்ள அரசாணையில் மேற்படி பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் மாநில தலைநகரிலும், 28 மாவட்ட தலைமையிடங்களிலும் வணிக வளாகங்கள் கட்ட ரூ. 10.34 கோடியும், ஒவ்வொரு விற்பனை மையத்திலும் விற்பனை தகவல் மையம் அமைக்க மொத்தம் ரூ. 1.00 கோடியும், நிதி ஒதுக்கீடு செய்து உரிய ஆணைகள் ஏற்கனவே வெளியிடப்பட்டுள்ளது. மேலும் ஒவ்வொரு மாவட்டத்திலும், கிராமப்புறங்களில் விற்பனை வசதிகளை ஏற்படுத்த முக்கிய கிராமங்களில் பொன்விழா சுய வேலைவாய்ப்புத் திட்டத்தில் உள்கட்டமைப்பு வசதிக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து கிராம விற்பனை அங்காடிகளும் கட்டப்பட்டு வருகிறது.

2. வறுமைக் கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் சுய தொழில் மூலம் பொருள்களை உற்பத்தி செய்து பயன்பெற 1998—1999 வரை ஒருங்கினைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் 'டோக்ரா' திட்டம் போன்ற திட்டங்களில் நிதியுதவி வழங்கப்பட்டு வந்தது. 1999—2000 முதல் சுய வேலை சார்புடைய அனைத்து திட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு பொன்விழா சுயவேலை வாய்ப்புத் திட்டமாக செயல்படுத்தப்படுகிறது எனினும், இத்திட்டங்களில் பயன்பெற்ற வறுமை கோட்டிற்குக் கீழ் உள்ள குடும்பங்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் விற்பனை செய்ய உரிய வசதி வாய்ப்புகள் அங்காங்கே கிடைப்பதில் உள்ள சிரமங்கள் பற்றியும் அரசு ஆய்வு செய்தது. எனவே, இத்திட்டத்தில் பயன்பெறுவோர் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை விற்பனை செய்ய உரிய வசதிகளை ஏற்படுத்துவதும், தொடர்புகளை உருவாக்குவதும் ஒரு முக்கிய அங்கமாக கருதப்படுகிறது. இத்தகைய உற்பத்திப் பொருள்களை பல்வேறு நிலையில் உள்ள மையங்களில், அவற்றின் தன்மைகேற்ப அதாவது கிராமப்புறங்களிலேயே விற்பனை செய்யப்படும் பொருள்கள், நகர்புறங்களில் விற்பனை செய்ய வாய்ப்புள்ள பொருள்கள், பெருநகரங்களில் விற்பனை செய்ய வாய்ப்புள்ள பொருள்கள் மற்றும் வெளி மாநிலங்களிலும், வெளிநாடுகளிலும் விற்பனைக்கு வாய்ப்புள்ள பொருள்கள் என்று அவற்றின் தன்மைக்கேற்ப விற்பனை வசதிகளையும் தொடர்புகளை ஏற்படுத்துவதும் இத்திட்டத்தின் சீரான செயல்பாட்டுக்கு அவசியம் என அரசு கருதுகிறது.

3. மேற்கண்ட பூமாலை திட்டத்தில் செயல்படுத்த உள்ள பல்வேறு விதமான நடைமுறைகள் குறித்து அரசு விரிவாக பரிசீலனை செய்தது. இதன்படி, கீழ்கண்டவாறு அரசு ஆணை பிறப்பிக்கப்படுகிறது மாநில தலைநகரம், மாவட்ட தலைநகரங்கள் மற்றும் முக்கிய கிராமங்களில் பொன்விழா கிராம சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் உற்பத்தி செய்யப்படும் ஊரக உற்பத்தி பொருள்களை விற்பனை செய்ய கட்டப்படும் விற்பனை வளாகங்களை 'பூமாலை' என்ற பெயரில் அமைக்கப்படும். இத்தகைய வளாகங்கள் பொன்விழா கிராம சுய வேலை வாய்ப்புத் திட்டத்தில் பயன்பெறும் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள குடும்பங்கள் குறிப்பாக, சுய உதவிக்குழுக்கள் தங்களுடைய பொருள்களை உழவர் சந்தைகள் போல் நேரடியாக நுகர்வோர்களுக்கு விற்பனை செய்ய வசதிகள் ஏற்படுத்தித் தரப்படும் மாநில தலைநகரத்தில் வணிக வளாகத்தை ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் அவர்களும், மாவட்ட தலைமை இடங்களில் கட்டப்படும் வணிக வளாகங்களை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களும் கட்டுவதற்கு தகுந்த இடங்களை தேர்வு செய்து உரிய கட்டிட வடிவமைப்பை தயாரித்து ஜனவரி திங்கள் 2001 க்குள் கட்டுமான பணிகளை முடித்து இந்த வளாகங்களை பயனுக்கு

கொண்டு வரப்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**4.** 'பூமாலை' விற்பனை வளாகத்தில் விற்பனை செய்யப்படும் பொருள்களின் விலையை நிர்ணயிப்பது வளாகத்தை நிர்வகிப்பது சரியான குழுக்களைத் தேர்ந்தெடுப்பது பொருள்களின் தரம் நிர்ணயிப்பது போன்றவை குறித்து ஊரக வளர்ச்சி இயக்குநர் விரிவாக ஆய்வு செய்து, ஒரு வரைவு வழிமுறையை தயாரித்து அரசுக்கு அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

**5.** இவ்வாணை நிதித் துறையின் அ.சா.கு.எண். 2147/FS/P/2000 நாள் 06.07.2000 இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**இரமேஷ் சந்திர பண்டா**
அரசு செயலாளர்